அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 49 - கிறிஸ்தவ நாகரிகம்

## புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

முழுப் பதிப்புரிமையுடையது

Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை – 2022 (2023)

## 49 - கிறிஸ்தவ நாகரிகம்

## புள்ளியிடும் திட்டம்

பலவினுள் தெரிவு 50 வினாக்களைக் கொண்டுள்ளது. 50 வினாக்களும் முழுப்பாடத் திட்டத்தையும் உள்ளடக்கியுள்ளது. மாணவர்கள் முழுப்பாடத் திட்டத்தையும் பாடப்பரப்பையும் அறிந்துள்ளனர் என்பதை அறிவதற்கு இது உதவியாக அமையும்.

**புள்ளி வழங்கப்படும் விதம்**

| | | |
|---|---|---|
| பலவினுள் தெரிவு வினாக்கள் | - | 50 |
| மொத்தம் | - | 50 |



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# கிறிஸ்தவ நாகரிகம் II

## பகுதி I

| | | |
|---|---|---|
| வினாக்களின் எண்ணிக்கை | - | 03 |
| விடையளிக்க வேண்டிய வினாக்கள் | - | 02 |
| ஒரு வினாவுக்கான புள்ளிகள் | - | 20 |
| ஒரு வினாவிலுள்ள மொத்த பிரிவுகள் | - | 04 |
| ஒவ்வொரு வினாவிலுமுள்ள பிரிவுக்கான புள்ளிகள் $(2+4+6+8)$ | - | 20 |
| எனவே பகுதி I இன் இரண்டு வினாக்களுக்குமான புள்ளிகள் | - | $2 \times 20 = 40$ |

## பகுதி II

| | | |
|---|---|---|
| வினாக்களின் எண்ணிக்கை | - | 05 |
| விடையளிக்க வேண்டிய வினாக்கள் | - | 03 |
| ஒரு வினாவுக்கான புள்ளிகள் | - | 20 |
| ஒரு வினாவிலுள்ள ஒரு பிரிவுக்கான புள்ளிகள் | - | 10 |
| ஒரு வினாவிலுள்ள மொத்த பிரிவுகள் | - | 02 |
| எனவே ஒரு வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் | - | $2 \times 10 = 20$ |
| எனவே பகுதி II இன் மூன்று வினாக்களுக்குமான புள்ளிகள் | - | $3 \times 20 = 60$ |

### இறுதிப் புள்ளி வழங்கும் முறை

| | | |
|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் I | - | 50 புள்ளிகள் |
| கிறிஸ்தவ நாகரிகம் II | - | 100 புள்ளிகள் |
| இறுதிப் புள்ளி | - | $50 + \left(\frac{100}{2}\right) = 100$ |



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

உதாரணம் - வினா இல 03

(i) ................................................................ ✓ △ 4/5
................................................................
................................................................

(ii) ................................................................ ✓ △ 3/5
................................................................
................................................................

(iii) ................................................................ ✓ △ 3/5
................................................................
................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப்பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය I
கிறிஸ்தவ நாகரிகம் I
Christian Civilization I

49 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்துப் பின்பற்றுக

※ 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (× இடுவதன் மூலம் காட்டுக.

**1.** உரோமை நகர் பல்வேறு கலாசாரங்களும், பண்பாடுகளும் சந்திக்கும் இடமாக திகழ்ந்தமைக்கான காரண யாது?
(1) பேரரசர் வணக்கம் (வழிபாடு)
(2) நெடுஞ்சாலை இணைப்பு
(3) பலம் வாய்ந்த உரோமைப் படைகள்
(4) உரோமை நிர்வாகம்
(5) நீர் மூலங்கள் (ஆதாரம்)

**2.** விவிலியத்தின் இலத்தீன் மொழிபெயர்ப்பாகிய 'வுல்காத்தா' இனை அதிகார பூர்வமாக ஏற்றுக்கொண் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் சங்கம்,
(1) நிசேயா. (2) கொன்ஸ்தாந்தின் நோபிள். (3) திரிதெந்து.
(4) 1ஆம் வத்திக்கான். (5) 2ஆம் வத்திக்கான்.

**3.** பாலஸ்தீனாவின் மேற்கு மலைப்பகுதியின் புவியியல் பிரிவுகளாவன,
(1) சமாரியா, பாசான், கிலியாத்து. (2) கலிலேயா, யூதேயா, பாசான்.
(3) கலிலேயா, சமாரியா, பாசான். (4) யூதேயா, சமாரியா, கிலியாத்து.
(5) கலிலேயா, யூதேயா, சமாரியா.

**4.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - எபிரோனுக்கு வடக்கே அமைந்துள்ளது.
B - பாலஸ்தீனாவின் கிழக்கு மலைப்பகுதியில் அமைந்துள்ளது.
C - இயேசுகிறிஸ்துவின் பிறப்பின் நகரம்.
D - ரெகோபோவாம் மன்னன் இந்நகரை ஆட்சி புரிந்தான்.
E - பேரரசன் கொன்ஸ்ரைன் ஓர் ஆலயத்தை இந்நகரில் கட்டினான்.
இவற்றுள் பெத்லகேம் குறித்த சரியான கூற்றுக்களாவன
(1) A, B, C (2) A, B, E (3) A, C, E (4) B, C, D (5) C, D, E

**5.** எந்த நாட்டு மன்னனால் நெகேமியா யூதேயாவின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்?
(1) பபிலோனிய (2) கிரேக்க (3) சிரிய (4) பாரசீக (5) பினிசீய

**6.** யாருடைய ஆட்சியில் கி.மு. 63 இல் எருசலேம் கைப்பற்றப்பட்டு பாலஸ்தீனா உரோமையரின் ஆட்சியில் கீழ் கொண்டு வரப்பட்டது?
(1) பொம்பே (2) தீத்து
(3) அலெக்ஸ்சாண்டர் (4) சைரஸ்
(5) நீரோ



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

7. இயேசுவின் காலத்தில் யூதேயாவினை ஆட்சிபுரிந்த உ ரோமை ஆளுநர்கள் நிரந்தரமாக தங்கியிருந்த இடம்
(1) எருசலேம். (2) செசாரியா (கடலோர நகர்). (3) திபேரியா.
(4) மெகிதோ. (5) பெத்தானியா.

8. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - எருசலேமின் ஆட்சியாளர்
B - கலிலேயா, பெரேயாவின் ஆட்சியாளர்
C - திபேரியா எனும் நகரைக் கட்டியவர்
D - கி. பி. 6ஆம் ஆண்டில் உரோமை ஆளுநர் இவரது இடத்திற்கு நியமிக்கப்பட்டார்.
E - லியோன் எனும் இடத்திற்கு இவர் நாடு கடத்தப்பட்டார்.
இவற்றுள் ஏரோது அந்திப்பா குறித்த சரியான கூற்றுக்களாவன
(1) A, B, C (2) A, C, D (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

9. எருசலேம் ஆலயத்தில் பணியாற்றிய குருக்கள் சார்ந்திருந்த கோத்திரமாவது,
(1) யூதா. (2) லேவி. (3) பெஞ்சமின். (4) சிமியோன். (5) ரூபன்.

10. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - தாவீதின் ஆட்சியின்போது கட்டப்பட்டது.
B - பபிலோனிய அடிமைத்தனத்தின் பிற்பாடு கட்டப்பட்டது.
C - கி. மு. 721 இல் இது அழிக்கப்பட்டது.
D - இக்கட்டடத்தில் 'திருத்தூயகம்' என்று ஓரிடம் காணப்பட்டது.
E - கி. பி. 70 இல் இது அழிக்கப்பட்டது.
இவற்றுள் எருசலேம் ஆலயம் குறித்த சரியான கூற்றுக்களாவன
(1) A, B, C (2) A, C, D (3) B, C, D (4) B, C, E (5) B, D, E

11. முதற் தொழுகைக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்ட இடம்
(1) யூதேயா. (2) சமாரியா. (3) எகிப்து. (4) பினீசியா. (5) பபிலோனியா.

12. 'ஷேமா' என்று அழைக்கப்படும் யூத செபத்தின் பொருளாவது
(1) எழுதுதல். (2) பேசுதல் (3) செவிமடுத்தல். (4) நடத்தல். (5) மனம்மாறுதல்.

13. பவுலின் திருமுகங்களில் 'காரிஸ்மா' எனும் பதம் குறிப்பதானது
(1) கிறிஸ்தவ ஒன்றிப்பு.
(2) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை.
(3) கடவுளின் அருட்கொடை.
(4) இயேசுவின் தன்னலமறுப்பு.
(5) திருச்சபைகளுக்கிடையிலான சகோதரத்துவம்.

14. மாட்டின் லூத்தருடன் தொடர்பற்ற கருத்து யாது?
(1) 'கிறிஸ்தவ மதத்தின் கட்டளைகள்' எனும் நூல்
(2) ஒரு ஜேர்மானிய அகுஸ்தீனியன் துறவி
(3) திருத்தந்தையின் அதிகாரத்துக்கு எதிரான கருத்து
(4) மீட்புக்கு நம்பிக்கை மட்டும் போதும்
(5) திருவிவிலியம் மட்டுமே இறைவெளிப்பாட்டின் கருவூலம்

15. எருசலேம் சங்கம் கூட்டப்பட்டதானது
(1) திருத்தொண்டர்களை நியமிப்பதற்காக.
(2) பவுலையும், பர்னபாவையும் புறவினத்தாரின் பணிக்காக ஒதுக்கி வைப்பதற்காக.
(3) பெரிய யாக்கோபுவின் மரணத்தை நினைவு கூர்வதற்காக.
(4) புறவினத்தார்கள் கிறிஸ்தவத்திற்கு மாறியபோது எதிர்கொண்ட சிக்கலுக்கு பதில் கொடுப்பதற்காக.
(5) கிறிஸ்துவின் இரு இயல்புகளை அறிக்கையிடுவதற்காக.

16. மேற்குலக துறவற வாழ்விற்கு புனித பெனடிக்ற் வழங்கிய பிரதான பங்களிப்பு
(1) உடல்சார் வேலைக்கு முக்கியத்துவம் வழங்கியமை.
(2) துறவற இல்லங்களில் சுயாதீன நிர்வாகத்தை ஏற்படுத்தியமை.
(3) துறவற வாழ்வுக்குரிய சட்ட ஒழுங்கை அறிமுகப்படுத்தியமை.
(4) அமைதி காத்தலுக்கான கட்டளை ஏற்படுத்தியமை.
(5) இறைவேண்டலின் முக்கியத்துவத்தை ஏற்படுத்தியமை.





Download all Past Papers>  https://bookbeekid.com/resource/past-papers/

17. மாற்கு நற்செய்தியின்படி இறையாட்சி நெருங்கிவிட்டதனால் மக்கள் அதற்கு அளிக்க வேண்டிய பதில் மொழி யாது?
(1) மனந்திரும்பி, திருமுழுக்குப் பெற வேண்டும்
(2) மனந்திரும்பி, அருளடையாளங்களைப் பெற வேண்டும்
(3) நற்செய்தியில் நம்பிக்கை கொண்டு, திருமுழுக்குப் பெற வேண்டும்
(4) மனந்திரும்பி, நற்செய்தியை நம்ப வேண்டும்
(5) நற்செய்தியை நம்பி, அருளடையாளங்களைப் பெற வேண்டும்

18. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - தொழுகைக்கூட வழிபாடுகளில் பங்கெடுத்தார்.
B - எருசலேமிற்கு திருப்பயணங்களை மேற்கொண்டார்.
C - பாரம்பரிய பாஸ்கா விழாவினைக் கொண்டாடினார்.
D - திருச்சட்டம் (தோரா) கற்க சீனாய் சென்றார்.
E - எருசலேமை உரோமையரிடமிருந்து மீட்க முயற்சிகள் மேற்கொண்டார்
இவற்றுள் யூத குடும்பத்தில் பிறந்தவரான இயேசு கடைப்பிடித்த விடயங்கள் யாவை?
(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) C, D, E

19. "இறையாட்சி என்பது நாம் உண்பதையும், குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல, மாறாக தூய ஆவி அருளும் நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது." என்று கூறியவர்
(1) புனித பவுல். (2) புனித யோவான். (3) புனித யூதா.
(4) புனித பேதுரு. (5) புனித பர்னபா.

20. மத்தேயு நற்செய்தியின்படி மணவிலக்கு சாத்தியமாவது,
(1) மணம்முடித்த தம்பதியினருக்குப் பிள்ளைகள் இல்லாதபோது.
(2) மணம்முடித்த பெண் பரத்தமையில் ஈடுபடும்போது.
(3) கணவன், மனைவி ஒருவர் மீது ஒருவர் ஈர்ப்பினை இழக்கும்போது.
(4) கணவன் தன் மனைவியைத் தரக்குறைவாக நடத்தும்போது.
(5) மனைவி வீட்டுப் பணிகளில் கவனம் செலுத்தாதபோது.

21. 'கிறிஸ்துவின் வாழ்க்கை' எனும் நூலின் ஆசிரியர்
(1) யாக்கோபுஸ் தே வொராஜினே. (2) சாக்சனி நாட்டு லூடால்பு.
(3) பீற்றர் கனிசியஸ். (4) பெரா்ரே தே பெருலலே.
(5) வின்சென்ற் தே பவுல்.

22. நற்செய்திகளிலுள்ள 'பொன் விதியுடன்' தொடர்புபட்ட கூற்று யாது?
(1) உன் முழு மனதோடு கடவுளை அன்பு செய்
(2) நீ திருந்தும்போது உலகம் தானாகத் திருந்தும்
(3) பிறர் உங்களுக்குச் செய்யவேண்டுமென விரும்புகிறவற்றை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்
(4) மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்
(5) அன்பு இல்லையேல் ஓசையிடும் தாளம் போலாவாய்

23. 'நாசரேத்தூர் இயேசு, யூதர்களின் அரசன்' எனும் அறிக்கை எழுதப்பட்ட மொழிகள் யாவை?
(1) கிரேக்கம், எபிரேயம், இலத்தீன் (2) எபிரேயம், அரமெயிக், இலத்தீன்
(3) கிரேக்கம், இலத்தீன், அரமெயிக் (4) எபிரேயம், கிரேக்கம், அரபு
(5) எபிரேயம், இலத்தீன், அரபு

24. "கடவுளின் அன்பு தெரிந்தெடுக்கப்பட்ட இனத்திற்கு மட்டுமல்ல மாறாக முழு மனித குலத்திற்குமானது" என்பதனைக் குறித்துக் காட்டும் புதுமையாவது
(1) நூற்றுவர் தலைவரின் ஊழியனைக் குணமாக்குதல்.
(2) கெனசரேத்தில் பேய் பிடித்தவரைக் குணமாக்குதல்.
(3) நயீம் விதவையின் இறந்த மகனுக்கு உயிர் கொடுத்தல்.
(4) ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல்.
(5) தண்ணீரின் மீது நடத்தல்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

25. திருத்தூதர் பணிகள் நூலின்படி திருத்தொண்டர்கள் நியமிக்கப்பட்டதானது
(1) ஆயர்களுக்கு உதவவும், நற்செய்தியினைப் பறைசாற்றுவதற்காகவும்.
(2) காணிக்கைகளைத் திரட்டி ஆலயங்களைக் கட்டுவதற்காக.
(3) ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்களை ஊக்குவிப்பதற்காக.
(4) கைம்பெண்களின் அன்றாடத் தேவைகளைக் கவனிப்பதற்காக.
(5) திருத்தூதர்களின் அரமெயிக் மொழியிலான மறையுரைகளை கிரேக்க மொழியில் மொழிபெயர்ப்பதற்காக.

26. கிறிஸ்தவர்களுக்கு எதிரான யூதர்களின் கலாபனையானது
(1) கிறிஸ்தவ சமூகத்தினை பலவீனம் அடையச் செய்தது.
(2) கிறிஸ்தவர்களின் நம்பிக்கையை இழக்கச் செய்தது.
(3) நற்செய்தியினை அறிவிப்பதற்கு அச்சம் கொள்ளச் செய்தது.
(4) கிறிஸ்தவம் எருசலேமிற்கு வெளியேயும் பரவச் செய்தது.
(5) புனித பவுலில் மனமாற்றத்தை ஏற்படுத்தியது.

27. திருச்சபைத் தந்தையர்களுள் 'இரும்பு மனிதன்' என்று அழைக்கப்பட்டவர்
(1) தேர்த்தூலியன்.
(2) ஓரிஜன்.
(3) ஜஸ்ரின்.
(4) இரனேயுஸ்.
(5) அலெக்ஸாந்திரியா கிளமென்ட்.

28. தூய ஆவி குறித்து பேசுகின்ற ஆரம்பகால தப்பறையான போதனை
(1) நெஸ்தோரிய வாதம்.
(2) ஆரிய வாதம்.
(3) பெலாஜிய வாதம்.
(4) மசதோனிய வாதம்.
(5) இயுத்திக்கேய வாதம்.

29. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - அலெக்ஸாந்திரியாவில் பிறந்தார்.
B - நெஸ்தோரிய வாதத்திற்கு எதிராக எழுதினார்.
C - 'கொன்ஸ்தாந்தினுக்கு அறிவுரைகள்' எனும் நூலின் ஆசிரியர்.
D - 'இறைவார்த்தை மனுவுருவாதல்' குறித்த நூலின் ஆசிரியர்.
E - ஜனவரி 2ஆம் நாள் திருவிழா.
இவற்றுள் புனித அத்தனாசியுஸ் வாழ்வு குறித்த சரியான கூற்றுக்களாவன
(1) A, B, C (2) A, C, D (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

30. புனித பசிலின் இரண்டு பிரதான நூல்களாவன
(1) தூய ஆவியானவர், படைப்பின் ஆறு நாட்கள்.
(2) கடவுளின் நகரம், புனித வனத்து அந்தோனியாரின் வாழ்வு.
(3) புனிதர்களின் வாழ்வு, ஆன்மீகப் பயிற்சிகள்.
(4) சீர்பெற்ற வாழ்வுக்கு வழி, ஆன்மாவின் கோட்டை.
(5) இருண்ட இரவு, ஆன்மீகப் பாடல்.

31. முதல் மூன்று சிலுவைப் போர்களை வழிநடத்திய மூன்று திருத்தந்தையர்கள் ஒழுங்கு முறைப்படி முறையே
(1) 8ஆம் கிரகோரி, 3ஆம் யூஜின், 2ஆம் ஊர்பன்.
(2) 3ஆம் யூஜின், 2ஆம் ஊர்பன், 3ஆம் இனசென்ட்.
(3) 3ஆம் இனசென்ட், 2ஆம் ஊர்பன், 8ஆம் கிரகோரி.
(4) 2ஆம் ஊர்பன், 8ஆம் கிரகோரி, 3ஆம் இனசென்ட்.
(5) 2ஆம் ஊர்பன், 3ஆம் யூஜின், 8ஆம் கிரகோரி.

32. பீற்றர் வால்டோ என்பவர்
(1) ஒரு திருச்சபைத் தந்தையர்.
(2) ஒரு பிரான்சிஸ்கன் துறவி.
(3) இரவலர் சபையின் முன்னோடி.
(4) மேற்கு துறவற வாழ்வின் தந்தை.
(5) ஓர் இத்தாலியத் துறவி.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**33.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - ஸ்கொட்லாந்தின் திருத்தூதர்.
B - திருத்தந்தை 2 ஆம் கிரகோரியாரால் வழிநடத்தப் பெற்றவர்.
C - வேற்றுக் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஓக்கு மரத்தை வெட்டியவர்.
D - கி. பி. 720 இல் உரோமைக்கு பயணித்தவர்.
E - ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டவர்.
இவற்றுள் புனித பொனிபாஸ் குறித்த சரியான **மூன்று** கூற்றுக்களாவன
(1) A, B, D (2) A, B, E (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

**34.** மெதடிஸ்த திருச்சபையினைத் தாபித்தவர்
(1) ஜோன் கல்வின். (2) ஜோன் வெஸ்லி. (3) வில்லியம் கேரி.
(4) தோமஸ் முன்ஸ்ரர். (5) உல்ரிச் சுவிங்கிளி.

**35.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - மரியாவின் விண்ணேற்பு
B - சுதேச மொழிகளில் திருவழிபாடு
C - நம்பிக்கை மற்றும் நற்செயல்களினூடாக மீட்பு
D - விவிலியம் பாரம்பரியம் ஆகிய இரண்டும் இறைவெளிப்பாட்டின் மூலங்கள்
E - அருளடையாளங்கள் கிறிஸ்துவால் உண்டாக்கப்பட்டவை
இவற்றுள் திரிதெந்தீன் பொதுச்சங்கத்தின் படிப்பினைகளாவன
(1) A, B, C (2) A, C, D (3) B, C, D (4) B, C, E (5) C, D, E

**36.** 'துறவியர் மடச் சிதைப்புச் சட்டத்தினை' உருவாக்கிய சீர்திருத்தச்சபை.
(1) லூத்தரன் (2) மெதடிஸ்தம்
(3) அங்கிலிக்கன் (4) கல்வினிஸ்ட்
(5) பப்ரிஸ்ட்

**37.** பாரீஸ் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது அதிற் காணப்பட்ட பீடங்களாவன
(1) இறையியல், மருத்துவம், சட்டம், கலை.
(2) இறையியல், விவசாயம், சட்டம், கலை.
(3) மருத்துவம், சட்டம், கலை, முகாமைத்துவம்.
(4) இறையியல், கலை, சட்டம், வணிகம்.
(5) மருத்துவம், சட்டம், மானிடவியல், பொருளாதாரம்.

**38.** பௌதீகத்திற்காக நோபிள் பரிசுபெற்ற கிறிஸ்தவ விஞ்ஞானி
(1) ரொபர்ட்டி சார்டேன். (2) அலெக்சாண்டர் கிரஹம்பெல்.
(3) சேர் ஐசக் நியூட்டன். (4) அல்பேர்ட் ஐன்ஸ்டீன்.
(5) அலெக்சாண்டர் பிளமிங்.

**39.** புனித தோமஸ் அக்குவினாஸ் எந்தத் துறவற சபையினைச் சார்ந்தவர்?
(1) பெனடிக்டன் சபை (2) பிரான்சிஸ்கன் சபை (3) இயேசு சபை
(4) சிஸ்ரேஷியன் சபை (5) டொமினிக்கன் சபை

**40.** புனித அவிலா தெரசாவின் புகழ்பெற்ற நூல்களாவன
(1) சீர்பெற்ற வாழ்வுக்கு வழி, கிறிஸ்து வழி வாழ்வு, ஆன்மாவின் கோட்டை.
(2) சீர்பெற்ற வாழ்வுக்கு வழி, ஆன்மாவின் கோட்டை, அடிப்படைகள்.
(3) மார்புக் கவசம், ஆன்மாவின் கோட்டை, தெய்வீக நகைச்சுவை.
(4) அடிப்படைகள், சீர்பெற்ற வாழ்வுக்கு வழி, கோபத்தின் நாள்.
(5) ஆன்மாவின் கோட்டை, கார்மேல் மலை ஏற்றம், யாத்திரிகளின் பயணம்.

**41.** ஓரத்தோரிய இசையின் முன்னோடியாகக் கருதப்படுபவர்
(1) திருத்தந்தை 1ஆம் கிரகோரி. (2) பெரொடின்.
(3) ஜோர்ஜ் பிரட்ரிக். (4) லுட்வீக் பீத்தோவன்.
(5) திருத்தந்தை 10ஆம் பயஸ்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**42.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - ஆலயத்தின் உட்புறம் சுருபங்களால் அலங்கரிக்கப்பட்டிருத்தல்
B - ஆலயத்தின் உட்கூரை சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டிருத்தல்
C - ஆலயங்கள் பூ வடிவிலான ஜன்னல்களைக் கொண்டிருத்தல்
D - ஆலயங்கள் கலையரங்குகள் போன்று காட்சியளித்தல்
E - ஆலயங்கள் செவ்வக வடிவிலான அமைப்பினைக் கொண்டிருத்தல்
இவற்றுள் பரோக் கட்டிடக் கலையின் சிறப்பம்சங்கள் ஆவன
(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

**43.** ஜப்பான் நாட்டிற்கு நற்செய்தி போதிக்க வந்த முதல் மறைபரப்பாளர்கள்
(1) அமலமரித் தியாகிகள். (2) கிளரீசியன் துறவிகள்.
(3) இயேசு சபையினர். (4) பெனடிக்ரன் துறவிகள்.
(5) கப்புச்சியன் துறவிகள்.

**44.** பின்வருவனவற்றுள் மிகச் சரியான சோடி யாது?
(1) அருட்பணி எம்மானுவேல் கொஸ்தா(இச) - சிங்கள இலக்கண நூல்
(2) தெல்லிப்பளை பேதுருப் புலவர் - நற்செய்தி. சவுலின் திருமுகம்
(3) பெஞ்சமின் செல்வம் - மூவிராசாக்கள் வாசிப்பு
(4) தொன் ஜெரோனிமோ - ஞானப்பள்ளு
(5) புலவர் லோறன்ஸ்பிள்ளை - சம்மதத்தின் முக்கிய கட்டளைகள்

● பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி 45 தொடக்கம் 47 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

| | | |
|---|---|---|
| A<br>அமலமரித் தியாகிகள் சபை | B<br>வேத காவியம் | C<br>கொஸ்மஸ் இன்டிக்கோபிளிஸ்டஸ் |
| D<br>கிறிஸ்தவ சபைகளின் விவரணம் | E<br>பெத்ரோ கஸ்கன் | F<br>பக்தி பிரபோதனா |

**45.** ஆயர் எட்மண்ட் பிரிஸ் அவர்களுடன் தொடர்புடைய சோடி
(1) A, B (2) A, F (3) B, C (4) B, E (5) C, D

**46.** அருட்பணி யாக்கோமே கொன்சால்வேசுடன் தொடர்புடைய சோடி
(1) A, B (2) A, C (3) B, D (4) B, E (5) C, F

**47.** இலங்கையின் காலனித்துவ ஆட்சிக்கு முற்பட்ட காலத்துடன் தொடர்புடைய சோடி
(1) A, B (2) A, C (3) B, C (4) C, D (5) D, E

**48.** வேளாண்மை பிரச்சனைகளை உலகளாவிய பிரச்சனையாக முன்வைத்த அன்னையும் ஆசிரியமும் எனும் சுற்றுமடலை எழுதிய திருத்தந்தை யார்?
(1) 12ஆம் பயஸ் (2) 23ஆம் யோவான் (3) 6ஆம் பவுல்
(4) 13ஆம் லியோ (5) 2ஆம் ஜோன் பவுல்

**49.** "மனச்சான்றின் குரலில் கடவுளின் திருவுளத்தை அறிந்து ஏற்று, அருளின் தூண்டுதலால் அதை வாழ்வில் கடைப்பிடிக்க முயன்றால் நிலை வாழ்வு பெறுவர்" எனும் கூற்றினை முன்வைக்கும் 2ஆம் வத்திக்கான் சங்க ஏடு,
(1) திருச்சபை
(2) திருச்சபையின் நற்செய்திப்பணி
(3) கிறிஸ்தவமல்லா மறைகளோடு திருச்சபைக்குள்ள தொடர்பு
(4) இன்றைய உலகில் திருச்சபை
(5) கிறிஸ்தவ ஒன்றிப்பு

**50.** பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A - திருச்சபைகள், சமூகங்கள் மத்தியில் உறவினைப் புதுப்பித்தல்.
B - திருச்சபைகள், சமூகங்களில் சமாதானக் குழுக்களை ஊக்குவித்தல்.
C - திருச்சபைகள், சமூகங்களில் ஏற்பட்டுள்ள காயங்களைக் குணமாக்குதல்.
D - திருச்சபைகளில், அடிப்படை கிறிஸ்தவக் குழுமங்களை உருவாக்குதல்.
E - திருச்சபைகள், கிறிஸ்தவர்களிடையே ஒன்றிப்புச் செயற்பாடுகளை ஊக்குவித்தல்.
இவற்றுள் ஆசிய கிறிஸ்தவ சம்மேளனத்தினைப் பிரதிபலிக்கும் மிகச் சரியான கூற்றுக்கள் முறையே
(1) A, B, C (2) A, C, D (3) A, C, E (4) A, D, E (5) B, C, E



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
අ.පො.ස.(උ.පෙළ) විභාගය/க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2022 (2023)

| විෂයය අංකය / பாட இலக்கம் | 49 | විෂයය / பாடம் | கிறிஸ்தவ நாகரிகம் |
|---|---|---|---|

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 5 | 21. | 2 | 31. | 5 | 41. | 3 |
| 02. | 3 | 12. | 3 | 22. | 3 | 32. | 3 | 42. | 2 |
| 03. | 5 | 13. | 3 | 23. | 1 | 33. | 4 | 43. | 3 |
| 04. | 3 | 14. | 1 | 24. | 1 | 34. | 2 | 44. | 1 |
| 05. | 4 | 15. | 4 | 25. | 4 | 35. | 5 | 45. | 2 |
| 06. | 1 | 16. | 3 | 26. | 4 | 36. | 3 | 46. | 4 |
| 07. | 2 | 17. | 4 | 27. | 2 | 37. | 1 | 47. | 4 |
| 08. | 4 | 18. | 1 | 28. | 4 | 38. | 4 | 48. | 2 |
| 09. | 2 | 19. | 1 | 29. | 2 | 39. | 5 | 49. | 1 |
| 10. | 5 | 20. | 2 | 30. | 1 | 40. | 2 | 50. | 3 |

✪විශේෂ උපදෙස්/விசேட அறிவுறுத்தல் : එක් පිළිතුරකට/ஒரு சரியான விடைக்கு ලකුණු 02 බැගින්/ஒரு புள்ளி வீதம் මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය II
கிறிஸ்தவ நாகரிகம் II
Christian Civilization II

49 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

※ பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) பண்டைய இஸ்ரயேல் மீது தாக்கம் செலுத்திய நான்கு நாடுகளைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

   (ii) சாலமோன் அரசனின் சாதனைகள் நான்கினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

   (iii) இயேசுவின் காலத்திலிருந்த தலைமைக் குருவின் பணிகளை விளக்குக. (6 புள்ளிகள்)

   (iv) பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பாகிய 'செப்வாஜிந்' உருவாக்கத்தில் கிரேக்க மொழிப் பயன்பாடு குறித்துக் கலந்துரையாடுக. (8 புள்ளிகள்)

2. (i) விதை விதைப்பவன் உவமையின்படி விதைகள் வீழ்ந்த நான்கு விதமான நிலங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

   (ii) மத்தேயு நற்செய்தியின்படி மலைப்பொழிவிலுள்ள பேறுகளுள் ஏதாவது நான்கினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

   (iii) இறைவேண்டல் குறித்து எவ்வாறு இயேசு வார்த்தையிலும், செயலிலும் போதித்தார் என்பதை விளக்குக. (6 புள்ளிகள்)

   (iv) முதலாம் நூற்றாண்டு யூத கலாபனையின் பின்னணியில் "அழுபவர்கள் ஆறுதல் பெறுவார்கள்" எனும் கூற்றினைக் குறித்துக் கலந்துரையாடுக. (8 புள்ளிகள்)

3. (i) மைக்கல் ஆஞ்சலோவின் சித்திரங்கள் இரண்டினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

   (ii) மொசேயிக் சித்திரக்கலையின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

   (iii) ஒல்லாந்தரின் ஆட்சி இலங்கையில் ஏற்படுத்திய தாக்கத்தினை விபரிக்குக. (6 புள்ளிகள்)

   (iv) தனியார் பாடசாலைகள் இலங்கை அரசு மயமாக்கப்பட்டமையினால் ஏற்பட்ட சாதக, பாதக விளைவுகளை விளக்குக. (8 புள்ளிகள்)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

## பகுதி II

4. (i) யூத கல்வி முறையின் இயல்புகளை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) தற்போதைய பாடசாலைக் கல்வி முறைமையையும், பண்டைய யூதக் கல்வி முறைமையையும் ஒப்பிட்டு, அவற்றின் சாதக, பாதக தன்மைகளைக் குறித்துக் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

5. (i) 'சிதறி வாழ்ந்த யூதர்கள்' எனக் கருதப்படுவோர் குறித்து விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி சிக்கலில் உழன்று தவிக்கும் விளிம்புநிலை மாந்தர்கள் மட்டிலான கிறிஸ்தவக் கடமைகள் குறித்துக் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

6. (i) தொடக்ககாலத் திருச்சபையில் காணப்பட்ட தப்பறையான போதனைகளுக்கு நிசேயா, எபேசு பொதுச்சங்கங்கள் வழங்கிய பதிலினை விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) இன்றைய சமூகத்தின் பல்வேறான திரிபுபடுத்தப்பட்ட படிப்பினைகளால் தவறாக வழிநடத்தப்பட்ட உமது சக நண்பன் / நண்பிக்கு எத்தகைய வழிநடத்துதலை வழங்குவீர் என்பது குறித்துக் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

7. (i) மேற்குலக கிறிஸ்தவ சீர்திருத்தத்திற்கு மாட்டின் லூத்தர் வழங்கிய பங்களிப்பினை விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) இன்றைய கிறிஸ்தவ புதுப்பித்தலுக்கு எத்தகைய மாற்றங்களை நீர் எதிர்பார்க்கின்றீர் என்பதைக் குறித்துக் கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

8. (i) 'குடும்ப வாழ்வு' குறித்த 2ஆம் வத்திக்கான் சங்கப் போதனைகளை விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) குடும்ப வாழ்வினைப் பாதிக்கும் காரணிகளை இனங்கண்டு, ஆரோக்கியமான குடும்ப வாழ்வினை ஊக்குவிக்க எடுக்கக்கூடிய முயற்சிகளை விளக்குக. (10 புள்ளிகள்)

※ ※ ※



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# கிறிஸ்தவ நாகரிகம்

## பகுதி II

## அமைப்புக் கட்டுரை I

**1. யூத கிறிஸ்தவ வளர்ச்சியில் தாக்கம் செலுத்திய பண்டை நாடுகள், அரசுகள், சமயக்குழுக்கள், கிரேக்க விவிலியம் என்பன பற்றிய மாணவர்களின் அறிவினைப் பரீட்சித்தல்.**

i. **பண்டைய இஸ்ரயேல் மீது தாக்கம் செலுத்திய நான்கு நாடுகளைப் பெயரடுக.**

- சுமேரியா
- எகிப்து
- கானான்
- அசீரியா
- பபிலோனியா
- பாரசீகம்
- கிரேக்கம்
- உரோமை

(2 புள்ளிகள்)

ii. **சாலமோன் அரசனின் சாதனைகள் நான்கினைக் குறிப்பிடுக.**

- உள்நாட்டுக் கொள்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நாட்டை,12 மாவட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு ஆளுநரை ஏற்படுத்தினார்.
- புதிய பல ஆயுதங்களையும் படை இரதங்களையும் பயன்படுத்தி, படைப்பலத்தை அதிகரிக்கச் செய்வதன் மூலம் எதிரிகளின் ஊடுருவலைத் தடுத்தார்.
- பல அரேபிய நாடுகளுடன் வாணிபத் தொடர்புகளை ஏற்படுத்தி, பலஸ்தீனாவின் பொருளாதாரத்தை மேம்படுத்தினார்.
- கட்டடப்பணிகளை சிறப்பாக முன்னெடுத்து புதிய நகரங்களை உருவாக்கி மக்களுக்கு குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தினார்.
- ஞானத்தின் வெளிப்பாடாகச் சிறந்த இலக்கியங்களை உருவாக்கியதுடன் யாவே பாரம்பரியம் இவரது ஆட்சிக்காலத்தில் உருவானது.
- தன் ஆட்சிக்கு குந்தகம் விளைவித்தவர்களைத் தோற்கடித்து நாட்டில் அமைதியை ஏற்படுத்தினார்.
- சாலமோன் வாணிப போக்குவரத்திற்காகச் செங்கடல் ஓரத்தில் ஒரு துறைமுகத்தைக் கட்டினார்.
- சமய, சமூக, பொருளாதார, கலை, கலாசாரத்தில் முன்னேற்றமடையச் செய்தார்.
- எருசலேம் ஆலயத்தைக் கட்டினார்

**(4 புள்ளிகள்)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

iii. **இயேசுவின் காலத்தில் இருந்த தலைமைக்குருவின் பணிகளை விளக்குக.**

- இஸ்ரயேலின் முடியரசுக் காலத்தில், தாவீது அரசனின் காலத்தில் சாதோக் என்பவர் குருத்துவப் பணிக்குத் தெரிவு செய்யப்பட்டதுடன், எருசலேமில் பலி நிறைவேற்றப்பட்டது. பின் மன்னர் சாலமோனின் காலத்தில் தலைமைக்குருவாக சாதோக் நியமிக்கப்பட்டார். அன்றுமுதல் சாதோக்கின் குடும்பத்தினர் குருத்துவப் பணியில்முக்கியத்துவம் பெற்றனர்.
- பபிலோனிய அடிமைத்தனம் வரை சாதோக்கின் வழிமரபின் பரம்பரையாக குருத்துவப் பணியை மேற்கொண்டனர்.
- இஸ்ரயேல் அரசரும் தலைமைக் குருக்களும் சமுதாய நிர்வாகத்தில் இணைந்து செயற்படுவதால் இரு நிலையிலுள்ளவர்களும் சம அந்தஸ்தில் போற்றப்பட்டனர்.
- இவர்கள் ஆலயப் பணிகளில் முழுக் கண்காணிப்பும், பரிகாரத்திருவிழா போன்ற முக்கிய திருவிழாவின் போது அதிதூயகத்திற்கு சென்று சிறப்புச் சடங்குகளையும் நிறைவேற்றுவர்.
- யூதேயாவின் உண்மையான அரசாங்கமாக இருந்து ஆளும் அதிகாரிகளுக்கு முன் யூத மக்களின் பிரதிநிதியாகச் செயற்படுவர்.
- யூதரின் நீதிவழங்கும் தலைமைச் சங்கத்திற்குத் தலைமை தாங்குவார்.
- அதிக வருவாய் தரும் பதவியாக இது கருதப்பட்டதுடன் அக்காலத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் காணிக்கைகளிலும் மிருக விற்பனையிலும் அதிக பங்கு வகித்தார்.

**(6 புள்ளிகள்)**

iv. **பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பாகிய 'செப்துவாஜிந்' உருவாக்கத்தில் கிரேக்க மொழிப் பயன்பாடு குறித்துக் கலந்துரையாடுக.**

- பலஸ்தீனம் கி.மு.333 முதல் கி.மு.63 வரையான காலப்பகுதியில் கிரேக்க மன்னன் மகா அலெக்ஸ்சாண்டர் தலைமையின் கீழ் கிரேக்கரின் ஆட்சிக்குட்பட்டதால் கிரேக்கக் கலாசாரம் எகிப்து முதல் ஆப்கானிஸ்தான் வரை பரவியது.
- புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கிரேக்கரின் ஆட்சியின் கீழ் பல இடங்களில் பரவி வாழ்ந்த யூதர்கள் கிரேக்கக் கலாசாரத்திற்கு உட்பட்டவர்களாகவும் கிரேக்க மொழியை நன்கறிந்தனர்.
- அக்காலத்தில் கிரேக்க மொழி பிரபல்யம் பெற்ற மொழியாகக் கருதப்பட்டமையால் எல்லோரும் கிரேக்க மொழியை விரும்பிக் கற்றனர். கிரேக்க மொழி கற்றோரின் மொழி என்று அழைக்கப்பட்டது. கிரேக்க மொழி தெரியாதோர் நாகரிகமற்றவர்களாகக் கருதப்பட்டனர்.
- பழைய ஏற்பாட்டு நூல்களில் பெரும்பாலானவை எபிரேய மொழியில் எழுதப்பட்டாலும் சில நூல்கள் கிரேக்க மொழியில் எழுதப்பட்டன. மக்கபேயர் இரண்டு நூல்களும், சாலமோனின் ஞானமும், புதிய ஏற்பாட்டின் எல்லா நூல்களுமே கிரேக்க மொழியில் எழுதப்பட்டது.
- பழைய ஏற்பாடு முழுவதும் கிரேக்கத்தில் மொழி பெயர்க்க வேண்டிய வரலாற்றுத் தேவை ஏற்பட்டது.
- கிரேக்கத்திற்கு மொழிபெயர்க்கப்பட்ட பழைய ஏற்பாட்டு நூல் 'செப்துவாஜிந்து' அல்லது எழுபதின்மர் நூல்கள் என்ற கிரேக்க மொழிபெயர்ப்பு பல இடங்களிலும் சிதறி வாழ்ந்த யூதர்களுக்கு இது ஆறுதலைக் கொடுத்தது.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- கிரேக்க மொழிபெயர்ப்பைத் திருச்சபையின் வரலாற்றில் குறிப்பாகத் தொடக்கத் திருச்சபையில் முக்கிய நூலாகப் பயன்படுத்தினர்
- திருத்தூதர்களும் ஆரம்பக் கிறிஸ்தவர்களும் இம்மொழிபெயர்ப்பை அதிகம் பயன்படுத்தினர்.
- இம்மொழிபெயர்ப்பின் அதிகாரபூர்வத்தன்மை திருச்சபையின் கிரேக்க இலத்தீன் தந்தையர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- யோவான் நற்செய்தியிலும் பவுலின் எழுத்துக்களிலும் இதன் தாக்கம் அதிகம் காணப்படுகின்றது.
- ஆரம்பகால திருச்சபையின் தந்தையர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தைப் பேணுவதற்காகக் கிரேக்க மொழியில் எழுதிய நூல்களைப் பயன்படுத்தினர்.

**(08 புள்ளிகள்)**

**2. இறையரசு பற்றிய உவமைகள், இறையரசின் பேறுகள், இயேசுவின் இறைவேண்டல் மற்றும் யூதக் கலாபனை குறித்த மாணவர்களின் அறிவினைப் பரீட்சித்தல்.**

i. விதை விதைப்பவன் உவமையின்படி விதைகள் வீழ்ந்த நான்கு விதமான நிலங்களைக் குறிப்பிடுக.

மத். 13:1-23

- வழியோரத்தில் விழுந்த விதைகள்
- பாறைப் பகுதியில் விழுந்த விதைகள்
- முட்செடிகளுக்கிடையில் விழுந்த விதைகள்
- நல்ல நிலத்தில் விழுந்த விதைகள்

(2 புள்ளிகள்)

ii. மத்தேயு நற்செய்தியின்படி மலைப்பொழிவிலுள்ள பேறுகளில் ஏதாவது நான்கினைக் குறிப்பிடுக.

மத். 5:3-10

- ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது
- துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்
- கனிவுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்
- நீதி நிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்
- இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்
- தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்
- அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்
- நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.

**(4 புள்ளிகள்)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

iii. **இறைவேண்டல் குறித்து எவ்வாறு இயேசு வார்த்தையிலும் செயலிலும் போதித்தார் என்பதை விளககுக.**

**வார்த்தையில்:**

- யூதசமயத்தில் தினமும் மூன்று முறை செய்யும் பொது மன்றாட்டு வேளைகள், அதனை ஒன்று கூடி நிறைவேற்றும் முறை வழக்கில் இருந்தது.
- அவ்வாறு ஒன்று கூடிச் செபிக்க வேண்டும் என்று இயேசு கற்பித்தார். ஆனால் மக்கள் தங்களைப் பார்க்க வேண்டுமென்று, மக்கள் தங்களைப் பக்திமானாகக் கருத வேண்டுமென்ற தவறான எண்ணத்துடன் செபம் செய்வதையே இயேசு கண்டிக்கின்றார்.
- "உங்கள் உள்ளறைக்கு சென்று கதவை அடைத்துக் கொண்டு செபியுங்கள்" என்று இறைவாக்கினர் எசாயா கூறியதை நினைவுபடுத்துகின்றார் (எசா. 26:20).
- இங்கு மறைவாக பார்ப்பதற்கு, பாராட்டுவதற்கு எவருமின்றி தனிமையில் செபிக்கும் படியாகக் கூறப்படுகின்றது.
- கடவுள் எங்குமிருக்கின்றார். எனவே அவரோடு பேசலாம். ஆனால் நாம் செபிக்கும் பொழுது அவரது பிரசன்னத்தைத் தேட வேண்டும்.
- கடவுள் மட்டுமே நாங்கள் செபிப்பதைப் பார்க்க வேண்டும். எங்கள் செபத்தைக் கேட்க வேண்டும் என்ற நோக்குடன் செபிக்க வேண்டும். அப்பொழுது அவருடைய கைம்மாறு கிடைக்கும்.
- "நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது பிற இனத்தவரைப் போல பிதற்ற வேண்டாம்…ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிவார்…" என்று இறைவாக்கினர் எசாயா கற்பித்தது போலவே இயேசு கூறுகின்றார். (எசா. 65:24) இங்கு புறவினத்தவரின் செபமும் உண்மையான செபமும் ஒப்பிட்டு வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன.
- தம் சீடர்கள் செபிக்கத் தன் செப வாழ்வாலும், படிப்பினையாலும் வழிகாட்டிய இயேசு அவர்கள் பின்பற்றக் கூடிய மாதிரிகைச் செபத்தை அவர்களுக்குக் கொடுத்தார். (மத். 6:9-13).

செயலில்:

- இயேசு அதிகாலையில் செபித்தார்
- இயேசு தனிமையில் செபித்தார்
- புதுமைகளை நிகழ்த்தும் முன் செபித்தார்
- திருத்தூதர்களைத் தேர்ந்தெடுக்கும் முன் செபித்தார்
- துன்பவேளையில் செபித்தார்
- தாழ்ச்சியுடன் செபிக்கக் கற்றுக் கொடுத்தார் (பரிசேயனும் ஆயக்காரனும் உவமை)

**(6 புள்ளிகள்)**

iv. **முதலாம் நூற்றாண்டு யூத கலாபனையின் பின்னணியில் 'அழுபவர்கள் ஆறுதல் பெறுவார்கள்' என்னும் கூற்றினைக் குறித்து கலந்துரையாடுக.**

- கிறிஸ்தவம் தன் வரலாற்றின் முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் பல எதிர்ப்புகளுக்கும் இடையூறுகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருந்தது.
- முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் யூதகலாபனைக்கு முகங் கொடுத்தார்கள்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- யூதகலாபனை என்பது யூதர்கள் கிறிஸ்தவர்களை வெறுத்துப் பகைத்து அவர்களைத் துன்புறுத்தியமை ஆகும்.
- இக்கலாபனையால் கிறிஸ்தவர்கள் பலவிதமான துன்பங்களுக்கு உள்ளானார்கள்.
- திருத்தூதர்கள் இயேசுவின் பெயரைச் சொல்லிப் போதிக்கக் கூடாது எனக் கூறி அவர்களைத் துன்புறுத்தினார்கள், கசையால் அடிக்கப்பட்டார்கள் சிறையில் துன்புறுத்தப்பட்டார்கள்.
- இக்கலாபனையின் உச்சக்கட்டமாக ஸ்தேவானின் மரணம் நடைபெற்றது.
- இக்கலாபனையினால் கிறிஸ்தவர்கள் மிகக் கொடூரமாகத் துன்புறுத்தப்பட்டார்கள்.
- இக்கலாபனையின் பின்னணியில் வாழ்க்கையில் எவ்வளவோ துன்பங்களும், சிலுவைகளும் சோதனைகளும் அடுத்தடுத்து வந்தாலும் அத்தனைக்கும் மத்தியில் மனந்தளராமல் தங்களுக்கு அருகில் இறைவன் இருக்கின்றார் என்ற விசுவாசத்துடன், அவர் தம்மை ஒரு பொழுதும் கைவிடமாட்டார் என்ற உறுதியான நம்பிக்கையுடன் வாழ்பவர்களுக்கு இறைவன் ஆறுதலளிப்பார் என்பதை உணர்த்துகின்றது.
- அத்தகைய உறுதியான விசுவாசம், தளராத நம்பிக்கை மனநிலையுடையோரே இறையரசில் அங்கத்துவம் பெறத் தகுதியுள்ளவர்கள். எனவே அழுபவர்கள் ஆறுதல் பெறுவார்கள் என்ற இறைவார்த்தையில் நம்பிக்கை கொண்டு வாழ வேண்டும்.
- யூத கலாபனையில் பல துன்பங்களை அவர்கள் அனுபவித்தாலும் அவற்றின் வழியாகக் கிறிஸ்தவம் பல இடங்களுக்கும் பரவி வளர்ச்சி ஏற்பட்டது.
- நம்பிக்கை திடப்படுத்தப்பட்டது.
- துணிவுடன் கலாபனைகளைச் சந்திக்கும் போது இறைவனின் துணை நிச்சயம் உண்டு.
- பொறுமையைக் கடைப்பிடித்தல்
- இயேசு தனது பணிக் காலத்தில் தன் பொருட்டு துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர் என்றார்.

(8 புள்ளிகள்)

3. **மத்திய காலச் சித்திரக் கலைகள், அவற்றின் பண்புகள், ஒல்லாந்தர் ஆட்சி இலங்கையில் ஏற்படுத்திய தாக்கம், தனியார் பாடசாலைகள் அரச உடமையாக்கப்பட்டதனால் ஏற்பட்ட சாதக, பாதக விளைவுகள் குறித்த மாணவர்களின் அறிவினைப் பரீட்சித்தல்.**

i. **மைக்கல் ஆஞ்சலோவின் சித்திரங்கள் இரண்டினைப் பெயரிடுக**

- உலகப்படைப்பு
- நடுத்தீர்வை
- பரிசுத்த குடும்பம்

**(2 புள்ளிகள்)**

ii. **மொசேயிக் சித்திரக்கலையின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.**

- சிறிய கண்ணாடித் துண்டுகளால் ஆக்கப்பட்டிருத்தல்
- சித்திரங்கள் அழகானவையாகவும் ஒளியுள்ளவையாகவும் இருத்தல்
- கரடுமுரடானவையாகக் காணப்படல்



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- அணிந்துள்ள ஆடைகளில் சுருக்கங்கள் காணப்படவில்லை
- ஆன்மீகத்தன்மையும் பக்தியும் காணப்பட்டதுடன் ஆளின் முழுமையான தன்மையையும் காண முடிதல்
- இயற்கைத் தன்மையை விட கம்பீரத்தன்மைக்கு முதலிடம் அளித்தல்

**(4 புள்ளிகள்)**

iii. **ஒல்லாந்தரின் ஆட்சி இலங்கையில் ஏற்படுத்திய தாக்கத்தினை விபரிக்குக.**

- கைத்தொழிற்சாலைகள், விவசாயப் பண்ணைகள் அறிமுகம் செய்யப்பட்டு மக்கள் தம் வருவாயை அதிகரிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. வரண்ட பிரதேசங்கள் நீர் பாய்ச்சப்பட்டு வளமாக்கப்பட்டன.
- வர்த்தகத்தில் ஏற்பட்ட மாற்றத்தினால் நகரங்கள் வளர்ச்சியுற்றன. இந்நகரங்களை இணைத்துப் பெருந்தெருக்கள் அமைக்கப்பட்டன. சிறிய ஆறுகள் பாலங்களாலும், பெரியவை வள்ளச் சேவைகளாலும் பிணைக்கப்பட்டன.
- அச்சுப்பதிவு இயந்திரத்தை முதன்முதலில் இலங்கையில் அறிமுகம் செய்து தமிழ், சிங்கள எழுத்துக்களை வார்த்துப் பல வேத நூல்களையும், துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டனர்.
- உரோமன் டச்சுச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ஒல்லாந்த உடைகளுக்கும், அலுமாரி, பொட்டலம், கதிரை, மேசை போன்ற வீட்டுத் தளபாடங்களுக்கும் மக்கள் பழக்கப்பட்டனர். மேலும் சுதேச மொழிகளில் ஒல்லாந்த சொற்கள் இன்றும் தாக்கம் செலுத்துகின்றன.
  உதாரணம்: இலாச்சி, கந்தோர், நொத்தாரிசு, சாக்கு
- நோயாளரைப் பராமரிக்க வைத்தியசாலைகளும் விடுதிகளும் தேவையான தாதிகளும், மத்ரோனாக்களும் பயிற்றப்பட்டனர்.
- நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டு சட்டப்படி விசாரித்தல், தண்டனை வழங்கல் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மக்களுக்கு நீதி கிடைத்தது.
- கோப்பி கராம்பு, கறுவா, ஏலம், தென்னை போன்றவற்றின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டதுடன், புடவை நெய்தல், அவற்றிற்கு சாயம் போடுதல், அவற்றைச் சந்தைப்படுத்தல் போன்றவற்றை விருத்தி செய்து மக்களையும் கைத்தொழிலிலும் வர்த்தகத்திலும் பங்கெடுக்கச் செய்தனர்.

**(6 புள்ளிகள்)**

iv. **தனியார் பாடசாலைகள் இலங்கை அரசு மயமாக்கப்பட்டமையினால் ஏற்பட்ட சாதக, பாதக விளைவுகளை விளக்குக.**

**சாதகமானவை:**

- பெற்றோர் தம் பிள்ளைகளின் மறைக்கல்வியில் முன்னரிலும் பார்க்கக் கூடிய கரிசனை எடுத்தனர்.
- தேசிய மறைக்கல்வி நிலையம் நிறுவப்பட்டது.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் மறைக்கல்வி நடுநிலையங்கள் அமைக்கப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு மறையாசிரியர்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு, அவர்களின் துணையுடன் பெரும்பணி ஆற்றப்பட்டது.
- பங்கு ரீதியில் மறைப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.
- விவிலிய வகுப்புக்கள், பாசறைகள், கருத்தரங்குகள் போன்ற பல போதனா முறைகளைக் கையாண்டு மறைக்கல்வி கற்பிக்கப்பட்டது
- நிழற்படக்காட்சிகள், திரைப்படங்கள், பொருட்காட்சிகள் போன்ற ஊடகங்கள் பெரிதளவில் பயன்படுத்தப்பட்டன.
- புதிய பாடநூல்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன.
- பங்குத்தந்தை, பெற்றோர், மாணவர்களுக்கு இடையில் நெருங்கிய உறவு, தொடர்பு ஏற்பட்டது.
- பொதுநிலையினர் தம் பணிகளில் உணர்ந்து செயற்பட்டனர்.

**பாதகமானவை**

- 700ற்கும் மேற்பட்ட பங்குப் பாடசாலைகள், அதன் காணிகள், கட்டடங்கள், தளபாடங்கள் அனைத்தும் எவ்வித நஷ்டஈடுமின்றி அரச உடைமையாக்கப்பட்டன.
- கிறிஸ்தவ மாணவர்களுக்கு கிறிஸ்தவ சூழலில் கல்வி பயிலும் உரிமை மறுக்கப்பட்டது.
- ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகள் அரச உடைமையாக்கப்பட்டன.
- 40 உயர்தர தனியார் பாடசாலைகள் நிதியுதவியின்றி அரசிடம் ஒப்படைக்கப்பட்டன.
- அநேக பாடசாலைகள் மதச் சூழலற்ற பாடசாலைகளாகக் காணப்பட்டன.
- கிறிஸ்தவ திருச்சபைகளுக்கு தம் மக்களுக்கு தம் மதத்தைக் கற்பித்து, மத முறைப்படி வளர்த்து உருவாக்கும் உரிமை மறுக்கப்பட்டது.
- மத ஆசிரியர்களை நியமிக்கும் உரிமை மறுக்கப்பட்டது
- பாடசாலைகளில் மறைக்கல்விக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் குறைக்கப்பட்டது.

(8 புள்ளிகள்)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

# கட்டுரை வினாக்கள் II

4. **யூதக் கல்வி முறையினை அறிவதுடன், அதன் தாக்கத்தை இன்றைய கல்வி முறையுடன் ஒப்பீட்டு அதனால் ஏற்படுகின்ற சாதக பாதக விளைவினை மாணவர்களின் உளப்பாங்கினைக் கொண்டு மதிப்பீடு செய்தல்.**

**i. யூத கல்வி முறையின் இயல்புகளை விளக்குக**

- யூத சமுதாயத்தில் சிறுவயதிலே மத ஒழுக்க விழுமியங்களையும் சமூக நடைமுறைகளையும் தாயிடம் இருந்தே கற்றுக் கொள்ள வேண்டும்.
- யூத குழந்தை ஆறுவயதில் தந்தையின் பொறுப்பில் கல்வியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- தொழுகைக் கூடங்களில் உள்ள மறைப் பாடசாலைகளில் சமய சட்ட நெறிகளை மனப்பாடமாகக் கற்றுக் கொள்ள வேண்டும்.
- அன்றாட செபம் (ஷேமா), புகழுரைச் செபங்கள், நீதி நூல்கள், ஞானநூல்களைக் கற்றுக் கொடுக்கும் பொறுப்பு தந்தையர்களுக்கு உரியதாகும்.
- அத்துடன் யூதச் சட்டங்களையும், சடங்குகளின் வரலாற்றுப் பின்னணிகளையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.
- யூதசமயத்தின் படி தொழுது கொள்கிறவர்கள் எழுத, வாசிக்க அறிந்தவர்களாயிருக்க வேண்டும்.
- விவிலியத்திலுள்ள கடவுளின் வார்த்தையை ஆண்குழந்தைகள் படிக்கத் தக்கதாக அவர்களது பெற்றோர் அவர்களுக்கு எழுத வாசிக்கக் கற்றுக் கொடுப்பது மிக முக்கியமானது.
- முந்தைய காலங்களில் கற்றுக் கொடுப்பது பெற்றோர்களின் கடமை.
- பின்னைய காலங்களில் தொழுகைக் கூடங்கள் கற்றுக் கொடுப்பதற்குரிய மைய இடம் அங்கே மறைநூல் அறிஞர் கற்றுக் கொடுத்தனர்.
- ஆசிரியர் நாற்காலியில் அமர சீடர்கள் தரையில் அவர் பாதத்திற்கருகில் அமர்ந்திருப்பார்கள்.
- சில புகழ்பெற்ற திருச்சட்ட அறிஞர்களுக்கு கற்றுக் கொடுப்பதற்கு வீடு இருந்தது. பல சீடர்கள் ஒவ்வொரு நாளும் அங்கே செல்வார்கள்.
- எருசலேம் ஆசிரியர் தங்கள் சீடர்களை கோவிலின் தூண்களுக்கிடையேயுள்ள பாதைகளில் கூட்டுவார்கள்.
- வாய்மொழிப் போதனை மூலமாகவே இவர்கள் கற்றுக்கொண்டார்கள். வாய்மொழியால் அறிவை ஒருவரிலிருந்து ஒருவருக்கு கடத்தும் முறை படிப்பில் முன்னுரிமை பெற்றது.
- ஆசிரியரது சொந்த வார்த்தைகளை சீடர்கள் மனனம் பண்ண வேண்டியதாயிருந்தது. ஆசிரியர் அதேபொருளை மீண்டும் மீண்டும் எடுத்துச் சொல்லுவார்.
- எல்லோரும் மனனம் செய்ய உரத்து சத்தமிட்டு ஞாபகத்தில் பதித்தனர்.
- விவிலியத்திலுள்ள வசனத்தை வாசித்து மனப்பாடம் பண்ணுவதில் அவர்களது கற்றல் அமைந்திருந்தது. அதன் பின்னர் விளக்கம் கொடுக்கப்பட்டது. அதுவும் மனப்பாடம் செய்யப்பட்ட வேண்டும்.
- ஒவ்வொரு ஆணும் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். தொழுகைக் கூடத்தினரால் வாசிக்கக் கேட்கப்படுவர். அதற்கு அவர் ஆயத்தமாயிருக்க வேண்டும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- கடவுளுடைய வார்த்தை எபிரேய மொழியில் இருந்தது. ஆனால் அவர்கள் அன்றாடம் பேசியது அரமேய மொழி. எனவே ஒவ்வொரு யூதனும் இரண்டு மொழிகள் அறிந்திருக்க வேண்டும்.
- கிரேக்க மொழி அச்சமயத்தில் கல்வியறிஞர்களுக்குரிய மொழியாய் இருந்த காரணத்தாலும் பலர் கிரேக்க மொழியையும் அறிந்திருந்தனர்.
- சில பிள்ளைகளுக்கு தந்தையர்கள் தாம் செய்து வந்த தொழில்கள் தொடர்பான தொழிற்கல்வியையும் கற்றுக் கொடுத்தனர்.
- ஒரு தொழிலுக்கு பயிற்சி கொடுப்பது தந்தையின் கடமை. மகன் சாதாரணமாக தந்தையின் தொழிலையே பின்பற்றுவான்.
- பவுல் பண்டிதர் தரத்தில் பயிற்சி பெற்ற ஒரு ராபி மட்டுமல்ல, தன் தந்தையைப் போல கூடார வேலை செய்கிறவராயிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**(10 புள்ளிகள்)**

ii. **தற்போதைய பாடசாலைக் கல்வி முறையையும் பண்டைய யூதக் கல்வி முறையையும் ஒப்பிட்டு, அவற்றின் சாதக, பாதக தன்மைகளைக் குறித்துக் கலந்துரையாடுக.**

- இயேசுவின் காலத்து யூதப்பண்பாட்டு மரபுகளில் ஒன்றாகக் கல்வி முறை விளங்குகின்றது.
- யூதக் குழந்தைகள் முதலில் பெற்றோரிடமும் பின்னர் மதப்பெரியாரிடமும் கல்வி கற்று அறிவில் சிறந்தவர்களாக விளங்கினர்.
- அவர்கள் மத்தியில் வாய்மொழிப் போதனைகள், மனனம் செய்யும் முறைகள், குருகுலக் கல்வி முறைகள் காணப்பட்டன.
- தற்காலக் கல்வி முறையிலும் இத்தகைய கல்வி முறைகள் காணப்படுவதுடன் இக்கல்வி முறைகளில் இருந்து தற்காலக் கல்வி முறை மாற்றமடைந்தும் உள்ளது.
- பண்டைய யூதக்கல்வி முறையில் இல்லங்களிலும், தொழுகைக் கூடங்களிலும் அவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்தனர். ஆனால் தற்காலப் பாடசாலைக் கல்வி முறையானது வகுப்பறை சார்ந்த, பரீட்சையை மையப்படுத்திய ஒன்றாக மாற்றமடைந்துள்ளது.
- யூதக் கல்வி முறையிலிருந்து தற்காலக் கல்வி முறையானது மாற்றமடைந்து செல்கின்றது. இதனால் இக்கல்வி முறைகளில் சாதகமான மற்றும் பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றன.

சாதகமான தன்மைகள்

- ஆரம்பகால யூதக்கல்வி முறைப்படி பெற்றோரிடமிருந்து பிள்ளைகள் கல்வி பயின்றனர். ஆனால் தற்காலத்தில் பாடசாலைக் கல்வி முறை மூலம் பெற்றோர் போதியளவு கல்வி பெறாத சந்தர்ப்பத்திலும் பிள்ளைகள் ஆசிரியர்களிடமிருந்து கற்றுத் தமது கல்வி வாழ்வை வளமாக்குகின்றனர்.
- யூதப் பண்பாட்டில் தந்தை தனது தொழிலைப் பிள்ளைகளுக்கு தொழிற் கல்வியாக வழங்கினர். ஆனால் தற்காலப் பாடசாலைக் கல்விமுறை மூலம் வெவ்வேறான தொழிற்துறைகள் விரிவுபடுத்தப்பட்டதோடு, சாதிய கட்டமைப்புக்கள் தகர்க்கப்படவும் காரணமாக அமைந்துள்ளன.
- இணையவழி கற்கைநெறி மூலம் எல்லைகளைக் கடந்த கல்வியைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு உண்டு.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- தற்போதைய கல்வி முறை பெண்களுக்கான கல்விக்கும் முக்கியத்துவம் வழங்கியுள்ளது.

**பாதகமான தன்மைகள்**

- யூதப் பண்பாட்டில் பெற்றோரிடமிருந்து கல்வி கற்றதால் பெற்றோருக்கு மதிப்பளித்து, பெற்றோர் சொற்படி பிள்ளைகள் செயற்பட்டார்கள். ஆனால் தற்காலப் பாடசாலைக் கல்வி முறையானது இதனை ஒரு சவாலாக மாற்றியுள்ளது.
- யூதப் பண்பாட்டு முறைக் கல்வியில் செபம் மற்றும் யூத சட்டங்கள் போதிக்கப்பட்டன. இதனால் பிள்ளைகள் இறைபக்தி உள்ளவர்களாக வாழ்ந்தார்கள். ஆனால் தற்கால போட்டிக் கல்வி முறையால் இறைவனை மறந்து கல்விக்கு தீவிர முக்கியத்துவம் கொடுக்கும் சமூகம் உருவாகியுள்ளது.
- ஆள்நிலைத் தொடர்பு (குரு-சீடன், மாணவர்-மாணவர்) இழக்கப்படுவதால் மாணவர்களின் ஆளுமை உருவாக்கம் குறைவடைகின்றமை.
- யூத கல்வியில் ஆண்களுக்கு மட்டும் முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

**(10 புள்ளிகள்)**

5. **'சிதறி வாழ்ந்த யூதர்கள்' எனும் அறிவினூடாக இன்றைய சமூகப் பொருளாதார சூழ்நிலைகளில் சிக்கித் தவிக்கும் 'விளிம்பு நிலை மாந்தர்கள்' மட்டிலான கிறிஸ்தவர்களின் கடமையினை மாணவர்களின் உளப்பாங்கின் அடிப்படையில் பரீட்சித்தல்.**

i. 'சிதறி வாழ்ந்த யூதர்கள்' என கருதப்படுவோர் குறித்து விபரிக்குக.

- பலஸ்தீனா நாடு வெவ்வேறு காலகட்டங்களில் வல்லரசுகளால் கைப்பற்றப்பட்டு அந்நிய அரசுகளால் ஆட்சி செய்யப்பட்டது.
- யூதர்கள் அந்நிய நாடுகளுக்கு நாடுகடத்தப்பட்டனர். யூதர்களில் பெரும்பாலானோர் தம் சொந்த நாடான பலஸ்தீனாவிற்கு திரும்பி வரவில்லை.
- கிரேக்கர், உரோமையர் பலஸ்தீனாவைக் கைப்பற்றி ஆண்ட காலத்தில் யூதர்களில் சிலர் தொழில், வியாபாரம் போன்ற பொருளாதார முன்னேற்றம் காரணமாக அல்லது படைவீரர்களாக கீழைத்தேச நாடுகளுக்கும், மத்தியதரைக் கடலைச் சூழவுள்ள நாடுகளுக்கும் சென்று குடியேறினர்.
- அந்நாட்டு அரசு அவர்களுக்கு பாதுகாப்பும் சலுகைகளும் வழங்கியது. சுதந்திரமாக அவர்கள் அங்கு வாழ்ந்தார்கள்.
- அவர்கள் சீரியா, அசீரியா, மொசப்பெத்தோமியா, எகிப்து, உரோமை, சின்ன ஆசியா, சிசிலியா, தெசலோனிக்கா லிபியா போன்ற நாடுகளில் குடியேறி வாழ்ந்தனர்.
- கி.பி. முதலாம் நூற்றாண்டில் பலஸ்தீனாவில் வாழ்ந்த யூதர்களிலும் பார்க்க நான்கு மடங்குக்கு அதிகமான யூதர்கள் பலஸ்தீனாவிற்கு வெளியே வாழ்ந்தனர்.
- இவர்கள் கிரேக்க மொழி பேசும் யூதர்கள் அல்லது யௌவன பண்பாட்டினர் என அழைக்கப்பட்டனர்.
- பலஸ்தீன யூதர்கள் இவர்களைத் தம்மை விடக் குறைந்தவர்களாகக் கருதினர்.
- இவர்கள் அந்நிய நாடுகளில் வாழ்ந்தாலும் பலஸ்தீனாவைத் தமது தாய் நாடாகவும்,



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

எருசலேமைத் தமது மதத்தின் தலைநகராகவும் கொண்டு வாழ்ந்தனர்.

- ஆலயப் பராமரிப்புக்கென வருடா வருடம் பணமும், காணிக்கைகளும் அனுப்பி வைப்பதுடன் வருடத்திற்கொருமுறை சிறப்பாக பெந்தக்கோஸ்தே விழாவிற்காக எருசலேம் ஆலயம் செல்வர்.
- இவர்கள் எருசலேமில் பெந்தக்கோஸ்தே விழாவிற்காகக் குழுமியிருந்த வேளையில் தான் தூய ஆவியின் வருகையுடன் திருச்சபை ஆரம்பமானது. (தி.ப. 2:1-13)
- பேதுருவின் மறையுரையைக் கேட்டு இவர்களில் பலர் மனம்மாறி (3000 பேர்) கிறிஸ்தவ மறையில் இணைந்து கொண்டனர். (தி.ப. 2:14-41)
- அந்நியப் பண்பாடுகள் தொடர்பாகப் பரந்த மனப்பான்மை கொண்டவர்களாக இருந்தமையால் இவர்களுக்கும் பலஸ்தீன யூதர்களுக்கும் இடையில் அடிக்கடி முரண்பாடு காணப்பட்டது.
- இவர்கள் தொலைவில் வாழ்ந்தாலும் மோசேயின் சட்டத்திலும் பாரம்பரிய சமயத் தாபனங்களிலும் அதிக பற்றுடையவர்களாகக் காணப்பட்டனர்.
- ஸ்தேவானின் மறைசாட்சி மரணத்திற்கு இவர்களே காரணமாயிருந்தனர். (தி.ப. 7)
- தூய பவுல் தனது தூதுரைப் பயணங்களில் இவர்களைச் சந்தித்து தமது போதனைகளை நிகழ்த்தியுள்ளார்.
- பல இடங்களில் பவுலுக்கு எதிராக கிளர்ச்சி செய்தவர்களும் இவர்களேயாவர்.

**(10 புள்ளிகள்)**

ii. **நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி சிக்கலில் உழன்று தவிக்கும் விளிம்புநிலை மாந்தர்கள் மட்டிலான கிறிஸ்தவக் கடமைகள் குறித்துக் கலந்துரையாடுக.**

- தற்கால நவீன உலகில் மக்கள் அரசியல் மற்றும் சமூகக் காரணிகளால் மிகவும் நெருக்கடியான பொருளாதாரப் பின்னடைவுகளுக்கும், உணவுத் தட்டுப்பாட்டுக்கும் முகங் கொடுத்து வீதி வீதியாய் வரிசையில் காத்திருக்கின்றனர். இத்தகைய பொருளாதார நெருக்கடி சிக்கலில் உழன்று தவிக்கும் மானிடர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்ற ரீதியல் ஆற்றக்கூடிய பங்களிப்புக்களாவன:
- தற்கால உலகில் மனிதர்களாகிய நாம் தேவைக்கு அதிகமாக பொருட்கள் நுகர்வு செய்து பதுக்கல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றோம். இதனால் பொருட்களை அதிகளவு இறக்குமதி மற்றும் உற்பத்தி செய்ய வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அத்துடன் பெருந்தொகைப் பணம் வீண் விரயம் செய்யப்படுகின்றது. எனவே தேவையறிந்து செயற்பட வேண்டும்.
- நாம் எமது அயலவர்கள் வறுமையில் வாடும் போது அவர்கள் மட்டில் இரக்கம் கொண்டு அவர்களது தேவைகளை நிவர்த்தி செய்யக் கூடிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.
- உள்ளூர் உற்பத்தியில் ஈடுபடுவதன் மூலம் செலவைக் குறைக்கலாம். இதனால் இறக்குமதி செய்வதற்காக செலவு செய்யப்படும் வழி குறைவடையும்.
- நாட்டின் வளர்ச்சிக்காகவும் வறுமைப்பட்டவர்களின் வளர்ச்சிக்காகவும் இறைவனிடம் செபிக்க வேண்டும்.
- கிறிஸ்தவ இளைஞர்கள் ஒன்று சேர்ந்து தொண்டு நிறுவனங்களை உருவாக்கி வறியவர்களுக்கு நிவாரண பொதி, தொழில்வாய்ப்பு போன்றவற்றை மேற்கொள்ளலாம்.

**(10 புள்ளிகள்)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

6. **தொடக்கத் திரு அவையில் தப்பறைகளுக்கு வழங்கப்பட்ட பதில்களை நோக்குவதுடன், இன்றைய நவீன திரிபுபடுத்தப்பட்ட படிப்பினைகள் மட்டிலான மாணவர்களின் நிலைப்பாட்டினையும் அதனை எதிர்கொள்வதில் வழங்கப்படும் ஆலோசனைகள் குறித்தும் மாணவர்களின் மனப்பாங்கினை மதிப்பீடு செய்தல்.**

i. **தொடக்ககாலத் திருச்சபையில் காணப்பட்ட தப்பறையான போதனைகளுக்கு நிசேயா, எபேசு பொதுச்சங்கங்கள் வழங்கிய பதிலினை விளக்குக.**

- கிறிஸ்தவ நம்பிக்கைப் படிப்பினைகளுக்கெதிரான போதனைகள் பேதகமாகும். தொடக்காலத் திருச்சபையில் கிறிஸ்தவ நம்பிக்கைகளுக்கெதிரான போதனைகள் தோன்றின.
- பாரம்பரிய கிறிஸ்தவப் போதனைகளான மூவொரு இறைவன், மூவொரு இறைவனின் 2ம் ஆளாகிய சுதனின் மனுவுடல் ஏற்பு, கிறிஸ்து மெய்யான இறைவனும், மனிதனுமாயிருக்கின்றார் என்ற மறையுண்மைகள் வலியுறுத்தப்பட்டன.
- இவ்வாறு கிறிஸ்தவ போதனைகளுக்கெதிராக தப்பறையான போதனைகள் முன்வைக்கப்பட்ட போது அவற்றை ஆராய்ந்து கிறிஸ்தவ கோட்பாடுகளை நெறிப்படுத்த திருச்சங்கங்கள் கூட்டப்பட்டன.
- அந்த வகையில் நிசேயா, எபேசு பொதுச்சங்கள் ஆரியவாதம், நெஸ்தோரியவாதம் ஆகிய தப்பறைகளுக்கு எதிராகப் பதில் கொடுக்கக் கூட்டப்பட்ட சங்கமாகும்.

ஆரிய வாதம் - நிசேயா சங்கம்

- ஆரியவாதம அந்தியோக்கிய மறைக்கல்விக் கூடத்திலே உருவாகியது. அதன் தாபகரான லூசியன் "வார்த்தை கடவுளிலும் கீழானவர்" என்ற தப்பறையை முன்வைத்தார்.
- இத்தப்பறையை ஆதரித்த ஆரியுஸ் என்பவர் கிரேக்க மெய்யியலின் துணையுடன் "வார்த்தை கடவுளிலும் கீழானவர்" என்ற கோட்பாட்டை விளக்கி கிறிஸ்து கடவுள் அல்ல. கிறிஸ்து உண்மையாகவே கடவுளின் மகன் என்றால் மகன் இல்லாத காலம் ஒன்று இருந்திருக்க வேண்டும். எனவே மகன் தந்தைக்கு சமமானவர் அல்ல, ஒரே பொருளானவர் அல்ல, நித்தியமானவர் அல்ல என்று போதித்தார்.
- ஆரியவாதத்தை ஆராய கி.பி.325இல் நிசேயா என்னும் இடத்தில் ஓர் சங்கம் கூட்டப்பட்டது.
- இச்சங்கத்தில் ஆரியவாதம் கண்டிக்கப்பட்டு கிறிஸ்து கடவுள், தந்தைக்கு சமமானவர், நித்தியமானவர், ஒரே பொருளானவர் என வலியுறுத்தப்பட்டு அவை நம்பிக்கைக் கோட்பாடாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அத்தனாசியார் இக் கோட்பாட்டை நிலை நாட்ட அயராது உழைத்தார்.
- ஆரியுஸ் திருச்சபையில் இருந்து விலக்கப்பட்டார்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

**நெஸ்தோரிய வாதம் - எபேசு சங்கம்**

- கொன்ஸ்தாந்திநோபிளின் பிதாப்பிதாவான நெஸ்தோரியஸ் என்பவர் 'இயேசு கடவுள், மனிதன்' எனவும் இரண்டு ஆட்களாக இருக்கின்றார் என்றும், மனித இயேசு கடவுள் அல்ல என்றும் கூறினார்.
- அத்துடன் மனித இயேசுவைப் பெற்றெடுத்த தாயைத் தேவதாய் எனக் கூற முடியாது எனவும் தப்பறையாகப் போதித்தார்.
- நெஸ்தோரியஸின் தப்பறையை ஆராய்வதற்காக எபேசில் கி.பி. 431இல் சங்கம் கூட்டப்பட்டது.
- இச்சங்கத்தில் நெஸ்தோரியஸின் தப்பறை கண்டிக்கப்பட்டு அவர் திருச்சபையிலிருந்து நீக்கப்பட்டதோடு பாரம்பரியக் கிறிஸ்தியல் கோட்பாடு வலியுறுத்தப்பட்டது.
- அதாவது கிறிஸ்து ஓர் ஆள், இறையாள் எனவும் அவருக்கு தெய்வீகம், மானுடம் என்னும் இரு இயல்புகளும் ஒருங்கே உள்ளன எனவும் எடுத்துரைக்கப்பட்டதோடு மரியாள் தேவதாய் எனவும் வலியுறுத்தப்பட்டது. சிறில் இக் கோட்பாட்டை நிலை நாட்ட அயராது உழைத்தார்.
- நெஸ்தோரியுஸ் திருச்சபையில் இருந்து விலக்கப்பட்டார்.

**(10 புள்ளிகள்)**

ii. **இன்றைய சமூகத்தின் பல்வேறான திரிபுபடுத்தப்பட்ட படிப்பினைகளால் தவறாக வழிநடத்தப்பட்ட உமது சக நண்பன் / நண்பிக்கு எத்தகைய வழிநடத்துதலை வழங்குவீர் என்பது குறித்து கலந்துரையாடுக.**

- தற்கால உலகில் கிறிஸ்தவர்களாகிய நாம் பல்வேறுபட்ட திரிபுபடுத்தப்பட்ட படிப்பினைகளால் அதிகளவான சவால்களுக்கு முகங்கொடுக்கின்றோம். இத்தகைய தவறான போதனைகளால் பாதிக்கப்பட்ட நண்பனுக்கு கூறக்கூடிய அறிவுரைகளை நோக்கின், திருவிவிலிய சான்றுகளை ஆதாரம் காட்டுதல்.
- கிறிஸ்தவ ஒற்றுமை பற்றி எடுத்துரைத்தல்.
- தப்பறையான போதனைகளுக்கு திருச்சபை வழங்கிய பதில்களை எடுத்துரைத்து, அவர்களை நேரிய பாதையில் இட்டுச் செல்லுதல்.
- பாதிக்கப்பட்ட நபர்களை மூத்தோர் அல்லது குருக்களிடம் அழைத்துச் சென்று அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை கேட்கச் செய்தல்.
- திரிபுபடுத்தப்பட்ட கொள்கைகளை பரப்பக் காரணமானவர்களை கண்டறிந்து அவர்களது தப்பறையான கருத்துக்களுக்கு தேவையான சரியான விளக்கங்களைக் கொடுத்து நம்பிக்கையில் நிலைக்கச் செய்தல்.
- இன்றைய காலத்தில் சமய ரீதியில் பிழையான புரிந்துணர்வுடன் இருப்பவர்களை வழிநடத்தல்.
- சமூகத்தில் காணப்படும் பிழையான நடைமுறைகளில் சிக்கியவர்களின் நிலையை உணர்த்தி, அதிலிருந்து மீள்வதற்கான வழிகாட்டலை வழங்குதல்.
- திருவிவிலியம், திருச்சபை போதிக்கும் ஒழுக்க விழுமியங்களை எடுத்துரைத்தல்.

**(10 புள்ளிகள்)**



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

7. **கிறிஸ்தவ சீர்திருத்தத்தில் மாட்டின் லூத்தரின் பங்களிப்பினை அறிவதுடன், இன்றைய கிறிஸ்தவ புதுப்பித்தல் பணியில் எதிர்பார்க்கப்படும் சீர்திருத்தங்கள் குறித்த மாணவர்களின் கருத்துக்களை பரீட்சித்தல்.**

i. **மேற்குலக கிறிஸ்தவ சீர்திருத்தத்திற்கு மாட்டின் லூத்தர் வழங்கிய பங்களிப்பினை விபரிக்குக.**

- மாட்டின் லூத்தர் ஜேர்மனியிலுள்ள சாக்சினியிலுள்ள எஜிஸ்லேபன் எனும் ஊரில் கி.பி. 1483. 11. 10 பிறந்தார். இவர் ஜேர்மனியைச் சேர்ந்த இறையியலாளர். புரட்டஸ்தாந்து சீர்திருத்த முன்னேற்றத்தைத் தொடக்கியவரும் இவரேயாவார்.
- கி.பி. 1501இல் எர்பர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று கி.பி. 1505இல் முதுமாணிப்பட்டம் பெற்றார்.
- கி.பி.1506இல் அகுஸ்தீனியக் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.
- கி.பி.1512இல் கலாநிதிப்பட்டத்தைப் பெற்ற இவர் கற்பித்தலில் ஈடுபட்டிருந்த வேளையில் புதிய ஏற்பாட்டில் விசுவாசமும் இறையியலும் பற்றி அதிக கவனம் செலுத்தினார்.
- கி.பி.1517. 10. 17ம் திகதி திருச்சபையின் முறையற்ற செயற்பாடுகளை வெளிக்கொணரும் பத்திரம் ஒன்றை வெளியிட்டார். இதில் முக்கிய கோட்பாடுகள் 95 அடங்கியிருந்தன.
- இதன் பேறாக கி.பி.1520இல் லூத்தரின் போதனைகள் கண்டனத்திற்குள்ளாயின. பின்னர் திருச்சபையிலிருந்து வெளியேறினார்.
- தம்முடைய படிப்பினைகளை ஜேர்மன் நாடு முழுவதும் பரப்புவதற்காக வினா-விடை முறையில் தமது மறைக்கல்வி நூலை வெளியிட்டார்.
- மக்கள் எல்லோரும் திருவிவிலியத்தை இலகுவாகப் பயன்படுத்த ஜேர்மன் மொழியில் அச்சிட்டு வழங்கினார்.
- நம்பிக்கையால் மட்டும் ஒருவன் மீட்படைய முடியும் என்ற புனித பவுலின் கூற்றை ஆணித்தரமாக வெளிப்படுத்திப் போதித்தார்.
- திருச்சபையில் நிலவிய பரிபூரண பலன்கள் பற்றிய கருத்தை விமர்சித்தார். பாவங்களிலிருந்து விடுதலை பெறுவதற்கு பணத்தை செலுத்துதல் இதனை அவர் வியாபாரம் அல்லது தூய வியாபாரம் என விமர்சித்தார்.
- உத்தரிப்புத்தலம், திருத்தந்தையின் வழுவாவரம், புனிதர்கள் பற்றிய கருத்துக்களையும் எதிர்த்துப் போதித்தார்.
- அருளடையாளங்கள் ஏழு எனும் திருச்சபையின் கருத்தை நிராகரித்து திருமுழுக்கு, நற்கருணை ஆகிய இரண்டுமே அருளடையாளங்கள் என்று கூறினார்.
- குருக்கள், துறவியர் வாழ்வில் காணப்பட்ட உலகியல் போக்குகளைத் தவறு எனச் சுட்டிக் காட்டினார்.
- திருச்சபையின் தெய்வீக ஸ்தபானத்தை மறுதலித்து அது ஒரு மனிதரால் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனமே என்றார்.
- குருத்துவ, ஆயர் பணிகள் தேவையில்லை என வாதிட்டார்.
- இதனால் லூத்தரன் மதம் ஜேர்மனியில் பரவ ஆரம்பித்தது.
- மேலும் 3ம் கிறிஸ்தியன் என்ற அரசன் டென்மார்க்கில் லூத்தரன் மதத்தை பலவந்தமாகத் திணித்தார்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- அதைத் தொடர்ந்து நோர்வே, சுவீடன் நாடுகளும், ஐஸ்லாந்து நாடும் லூத்தரன் மதத்தை அரச மதமாக்கின.
- இவரது சீர்திருத்தக் கொள்கையால் கல்வின், சுவிங்ளி கவரப்பட்டதுடன் மேற்குலக நாடுகளுக்கும் பரவச் செய்தது.
- இவரது ஆக்கங்கள் மேற்குலக நாடுகளில் பலரைக் கவர்ந்ததால் படிக்கத் தொடங்கினர்

(10 புள்ளிகள்)

**ii. இன்றைய கிறிஸ்தவ புதுப்பித்தலுக்கு எத்தகைய மாற்றங்களை நீர் எதிர்பார்க்கின்றீர் என்பதைக் குறித்துக் கலந்துரையாடுக.**

- திருவிவிலியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அனைத்து மக்களும் படிப்பதற்கு ஊக்குவித்து விசுவாசத்தில் வளர்த்தல்.
- அயலவர்களை அன்பு செய்து, பிறரை மன்னித்து வாழல்.
- ஊடகங்களின் செயற்பாடுகள் அதிகரித்து இளைஞர், யுவதிகள் தீய பாதையில் செல்வதால் பல கிறிஸ்தவ சிந்தனைகள், பாடல்கள், நாடகங்கள் போன்றவற்றை ஒலிபரப்பி ஆன்மீகத்தில் நாட்டத்தை ஏற்படுத்தல்.
- பங்குப் பணி வாழ்வில் மக்களை ஒன்றுபடுத்தல்.
- மேய்ப்புப் பணி மாநாட்டை நடாத்துதல்.
- திருச்சபையின் படிப்பினைகளை தெளிவுபடுத்த கருத்தரங்குகள், பாசறைகள், குறும்படங்கள், போட்டிகள் நடாத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- சிரமதானம், திருயாத்திரை மேற்கொள்ளல்.
- தனிமனித வாழ்வில் புதுப்பித்தலை ஏற்படுத்தல்.
- குடும்ப வாழ்வில் புதுப்பித்தலுக்குத் தேவையான வழிகாட்டல்களைப் பெற்றோர் பிள்ளைகளுக்கு வழங்குதல்.
- திருச்சபையானது உறவுச் சமூகமாக செயற்படும் வழிமுறைகளை வழங்குதல். குறிப்பாக படிமுறை அமைப்பில் இருந்து குழும வாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
- பங்கேற்கும் அமைப்புக்களை உருவாக்குதல்.
- கிறிஸ்தவ சபைகளிடையே ஒன்றிப்பை ஏற்படுத்துதல்.
- ஏனைய சமயங்களுடன் பல்சமய உறவை ஏற்படுத்துதல்.

(10 புள்ளிகள்)

**8. 'குடும்ப வாழ்வு' குறித்த 2ஆம் வத்திக்கான் பேரவையின் போதனைகளை அறிவதுடன், பாதிப்புக்குள்ளாகும் குடும்ப வாழ்வினை சீர்படுத்தும் முயற்சியில் மேற்கொள்ளக்கூடிய முயற்சிகளை மாணவர்களின் உளப்பாங்கினூடாக மதிப்பீடு செய்தல்.**

i. குடும்ப வாழ்வு குறித்த 2ஆம் வத்திக்கான் சங்கப் போதனைகளை விபரிக்குக.

- நல்ல திருமணம், குடும்ப வாழ்க்கை வழியாக ஒவ்வொருவரும் மனித சமூகத்தில் நன்மையை உருவாக்க முடியும்.
- திருமணம் இறைவனால் ஏற்படுத்தப்பட்டமையினால் அதன் தூய்மை பேணப்படல் வேண்டும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- திருச்சபையில் திருமணம் எனும் அருளடையாளம் வழியாக கிறிஸ்தவ குடும்பங்கள் உருவாகின்றன.
- திருமணத்தின் வழியாக இறைவனே கணவனையும் மனைவியையும் (ஒருமை, கட்டவிழாமை) இணைப்பதனால் இந்த உறவு பிரிக்கப்படக் கூடாது. (விவாகரத்து பற்றிய படிப்பினைகள் மத்.19:1-12)
- குடும்பங்கள் சமூகத்தின் மிகச் சிறிய அலகு. அதுவே சமூக உருவாக்கத்திற்கு முதற்படியாக அமைகின்றது.
- இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்க வேண்டும்.
- திருமண அன்பின் வழியாக தமது திருமண உறவை ஊட்டம் பெறச் செய்து வளர்ச்சி பெறச் செய்தல் வேண்டும். அதாவது இயேசுக்கிறிஸ்துவின் வாழ்வு, பாடுகள், மரணம், உயிர்ப்பு வழியாக வெளிப்படுத்தப்பட்ட இறையன்பிற்கும் சாட்சியம் பகர வேண்டும்.
- திருமணத்தின் மூலம் பிள்ளைகளைப் பெற்றெடுப்பதற்கும், திருச்சபையின் படிப்பினைகளுக்கேற்ப அவர்களை வளர்ப்பதற்கும் பெற்றோர் பொறுப்பேற்கின்றனர்.
- கணவனும் மனைவியும் நிறைவாழ்வு அடைவதற்கு ஒருவருக்கொருவர் உதவியாயுள்ளனர்.
- இறைவனின் படைப்புச் செயற்பாட்டில் பங்கேற்க அழைக்கப்பட்டுள்ளார்கள்.

**(10 புள்ளிகள்)**

ii. **குடும்ப வாழ்வினைப் பாதிக்கும் காரணிகள் இனங்கண்டு, ஆரோக்கியமான குடும்ப வாழ்வினை ஊக்குவிக்க எடுக்கக் கூடிய முயற்சிகளை விளக்குக.**

பாதிக்கும் காரணிகள்:

- கணவன் மனைவி ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளாமை
- போட்டி பொறாமை, தற்பெருமையில் வாழல்
- அவசரத் திருமணமும் அவசர விவாகரத்தும்
- கணவன் மனைவியை விட்டு அல்லது மனைவி கணவனை விட்டு வெளிநாடு செல்லுதல்
- நீலப்படங்கள், சினிமா மோகம், சின்னத் திரைப்படங்கள், நவீன ஊடகங்கள்
- திருமணத்தைப் பற்றிய போதிய அறிவின்மை
- போதைவஸ்து மது அருந்துதல் போன்ற தீயபழக்கவழக்கங்கள்
- ஓரினச் சேர்க்கை
- நவநாகரிக மோகம்
- தற்காலத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார முறைமை
- பிரமாணிக்கமின்மை

**ஆரோக்கியமான குடும்ப வாழ்வுக்குத் தேவையானவை:**

- திருமணம் இறைவனால் ஏற்படுத்தப்பட்டது என உணர்ந்து குடும்பத்திலுள்ள கணவன் மனைவி களங்கமின்றி அன்புடன் விட்டுக் கொடுத்து, போட்டி பொறாமைகளைத் தவிர்த்து தூய அன்புடன் வாழுதல்.
- திருமணம் ஓர் அருட்சாதனம், அது ஒரு நீண்டகாலப் பயிர் என்பதை உணர்ந்து தியாகம், அர்ப்பணிப்புடன் திருமணத்தில் இணைதல் வேண்டும்.



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/

- கூடிய வகையில் கணவன் மனைவி சேர்ந்து வாழ்ந்து தங்களது பிள்ளைகளை இறை ஞானத்திலும் ஒழுக்கத்திலும் வளர்த்து நற்பிரசை ஆக்குவதை நோக்கமாகக் கொண்டு வாழுதல் வேண்டும்.
- தாய், தந்தையை மதித்துப் பிள்ளைகள் நடக்க வேண்டும். குடும்பங்களில் இருக்கும் ஒவ்வொருவரும் மனித மாண்பைப் பேணி வளர்க்க வேண்டும்.
- நீலப்படங்கள், சினிமா மோகம் சின்னத் திரைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காது ஆன்மீகத்தைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.
- நவீன ஊடகங்களின் செயற்பாடுகளை முக்கிய தேவைக்கு மேலாக உபயோகிப்பதைத் தவிர்த்தல்.
- திருமணத்தைப் பற்றி பாசறைகள், கருத்தரங்குகள், குடும்பவளத் துணை நிலையங்கள் மூலமும், திருவிழா நவநாட்களில் குடும்ப வாழ்வின் மேன்மையைப் பற்றியும் எடுத்துக் கூறல்.
- போதைவஸ்து, மது அருந்துதல் அதனால் ஏற்படும் தீமை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- இறைவன் ஆணையும் பெண்ணையும் திருமணத்தில் இணைத்தார். இதனால் ஓரினச் சேர்க்கைத் திருமணத்தைத் தவிர்த்தல்.
- இன்னும் உல்லாச வாழ்க்கை, பொருளாதார மோகம், நவநாகரிக மோகம் போன்றவற்றைத் தவிர்த்து இறையன்பிலும், செபத்திலும் வாழல்.
- நல்ல குடும்பத்திற்கு உதாரணம் திருக்குடும்பமாகும்.
- பவுலின் திருமடல்களை அடிப்படையாகக் கொண்டு எழுதியிருப்பினும் புள்ளி வழங்கவும்

(10 புள்ளிகள்)



Download all Past Papers> https://bookbeekid.com/resource/past-papers/